TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109448

1. District : Thiruvallur PS: VS AC Thiruvallur Year: 2023 FIR No.: 4/AC/2023/TVL Date: 23.03.2023 15.30 hrs
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 (as amendment 2018) Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல் : 06.3.2023 at about — Date to நாள் வரை : 23.03.2023 about 11.15 hrs
Time Period நேர அளவு : — Time from நேரம் முதல் : 11.30 hrs in his office — Time to நேரம் வரை : through cell phone
(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.03.2023 — Time நேரம் : 14.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 23.03.2023 — Time நேரம் : 15.30 hrs

Seen [signature] 24/3/23

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Oral Statement recorded as complaint

Seen [signature] 24/3/23

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: North west - About 65 KMs.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : — முறைக் காவல் எண்
(b) Address : O/o Podaturpet, TANGEDCO Office, Thiruvallur District
முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name Tr. S.V. Prakash — (b) Father's/ Husband's Name S/o Velayutham
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 32 years — (d) Nationality : Indian — (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு — நாட்டினம் — வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் — வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Auto Driver — (g) Address : No: 105, Chinna Street, Kesavaraja kuppam Village, Pallipet Taluk, Thiruvallur Dist.,
தொழில் — முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Ganapathi, Commercial Inspector, TANGEDCO Office, Podaturpet, Thiruvallur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

By the Complainant.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Demended bribe amount of Rs 2,000/- to make arrangements for new EB Service connection

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted: When I present at Thiruvallur Vigilance & Anti-Corruption office on 23.03.2023 at 14.00hrs, one complainant Tr. S.V. Prakash, Age-32, S/o. Velayutham from Kesavarajakuppam village, Pallipet Taluk, Thiruvallur District appeared before me and gave his oral statement against one commercial Inspector Tr. Ganapathi at Podaturpet TANGEDCO office, Thiruvallur District and the same statement was recorded by me as complaint, it as follows.

(FIR content will follow in the next separate page...)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed N. Sumathra Rank ...Inspector... to take up the Investigation / Refused Investigation / transferred to PS VSAC, Thiruvallur on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant,
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு 23/03/2023

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
23/03/2023

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 24.03.2023 @ 9.40 hrs

Name: பெயர் N. SUMATHRA
Rank: நிலை Inspector of Police
Thiruvallur VSAC.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21 3 16(HCL-12)p.2

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.4/AC/2023/TVL, U/s. 7 (a) of Prevention of Corruption Act – 1988 as amended in 2018, continues......)**

திரு.S.V.பிரகாஷ், வயது-32, த/பெ. வேலாயுதம், எண்.105, சின்ன தெரு, கேசவராஜகுப்பம் கிராமம், பள்ளிப்பட்டு தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் என்பவர் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு, இன்று (23.03.2023) வந்து என் முன் ஆஜராகி கொடுத்த வாக்குமூல புகார். நான், திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு தாலுக்காவிலுள்ள கேசவராஜகுப்பம் கிராமத்தில் என் குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். நான் கூலிக்கு ஆட்டோ ஓட்டி பிழைப்பு நடத்தி வருகிறேன். என்னுடன் பிறந்தவர்களான தம்பி இராஜேஷ் மற்றும் தங்கை சுமித்ரா ஆகியோர்களுக்கு திருமணம் ஆகிவிட்டது. மேற்படி கிராமத்தில் எங்களுக்கு சொந்தமான சர்வே எண். 109/18பி தற்போது 109/18பி1 என்ற இடத்தில் சுமார் 9½ சென்ட் மனையில் என் அப்பா கட்டிய தளம் வீட்டில் என் தம்பி வசித்து வருகிறான். மேற்படி கிராமத்திலுள்ள 9½ சென்ட் மனையை நானும் என் தம்பியும் சமமாக பிரித்துக் கொண்டோம். என் தங்கைக்கு பணம் கொடுத்துவிட்டோம். அந்த மனையில் சுமார் 4 3/4 சென்ட் காலியிடத்தினை எனது பெயருக்கு எங்கள் அம்மா ரமணி மற்றும் தம்பி தங்கை ஆகியோர்கள் சேர்ந்து கடந்த 30.07.2021-ந்தேதி செட்டில்மெண்ட் ஆவண எண்.1281/2021-ன் மூலம் பள்ளிப்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவு செய்து கொடுத்தார்கள். அந்த இடத்தில் அரசு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் தளம் போட்ட வீடு கட்டியுள்ளேன். நான் கட்டிய புதிய வீட்டிற்கு தனியாக புதிய மின்சார சர்வீஸ் கேட்டு, கடந்த 24.02.2023-ந்தேதி இ-சேவை மையத்தில் சம்மந்தப்பட்ட ஆவணங்களை இணைத்து என் பெயரில் மனு பதிவு செய்தேன். அந்த மனு எண். 200083530223108 ஆகும். அதற்கு புதிய மின்னிணைப்பு சம்மந்தமாக கடந்த 01.03.2023-ந்தேதி பொதட்டூர்பேட்டை மின்சாரத்துறை அலுவலகத்திற்கு சென்று புதிய மின்னிணைப்பு குறித்து கேட்டபோது, அந்த அலுவலகத்தில் பணிபுரியும் கணபதி என்ற கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் அவர்களை பார்க்கச்சொன்னார்கள். நானும் அன்றே காலை சுமார் 11.30 மணியளவில் திரு.கணபதி, கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் அவர்களை, அவரது அலுவலகத்தில் பார்த்து, என் மனு குறித்து கேட்டபோது, அவர் அதனை கம்ப்யூட்டரில் செக்கப்பண்ணிவிட்டு, உன் வீட்டிற்கு வந்து பார்க்கிறேன், நீ போ என்று அனுப்பினார். பின்னர் அவர் அன்றைய தினம் மாலை சுமார் 04.00 மணிக்கு வந்து என் வீட்டை பார்த்துவிட்டு, நான் போன் செய்கிறேன் என்று கூறிவிட்டு அவருடைய செல்போன் எண்ணை எனக்கு கொடுத்துவிட்டும், என்னுடைய செல்போன் எண்ணையும் பெற்றுக்கொண்டு சென்றுவிட்டார். பின்னர் எனக்கு எந்த தகவலும் இல்லாமையால், நான் கடந்த 06.03.2023-ந்தேதி காலை சுமார் 11.30 மணிக்கு பொதட்டூர்பேட்டை மின்சார வாரிய

**(FIR contents continues to the next page......)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.4/AC/2023/TVL, U/s. 7 (a) of Prevention of Corruption Act – 1988 as amended in 2018, continues……)**

அலுவலகத்திற்கு சென்று திரு.கணபதி, கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் அவர்களை பார்த்து, என் புதிய மின்னிணைப்பு சம்மந்தமாக கேட்டேன். அப்போது திரு.கணபதி அவர்கள், என் வீட்டிற்கு தனி மீட்டர் மற்றும் புது மின்னிணைப்பு வேண்டும் என்றால், ரூ.5,086/- பணம் அரசு கட்டணமாகவும், அவருக்கு தனியாக ரூ.2,000/-ம் கொடுக்க வேண்டும் என்றும், அப்படி கொடுத்தால்தான் புதிய மின்னிணைப்பு சர்வீஸ் கொடுக்க ஏற்பாடு செய்வேன் என்றும் தெரிவித்தார். மேலும், இந்த மனு 15 நாட்கள் வரைதான் நிலுவையில் இருக்கும். நீ அரசிற்கு செலுத்த வேண்டிய பணம் ரூ.5,086/-ஐ கட்டவில்லை என்றால், உன்னுடைய மனுவை cancel செய்துவிடுவோம் என்று சொன்னார். அவ்வளவு பணம் என்னிடத்தில் தற்போது இல்லை என்று கூறியதற்கு, நீ எப்படியாவது அரசிற்கு செலுத்தவேண்டிய பணத்தோடு, நான் கேட்ட ரூ.2,000-ம் சேர்த்து கொண்டுவந்து கொடுத்தால், மின்னிணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்வேன் என்று கராறாக கூறி அனுப்பிவிட்டார். அவர் என் செல்போனிற்கு தொடர்பு கொண்டு பலமுறை பேசினார். அதற்கு நான் பணம் இன்னும் ஏற்பாடு செய்ய முடியவில்லை என்று கூறினேன். அதற்கு அவர் வரும் திங்கட்கிழமைக்குள் (13.03.2023) பணம் செலுத்த வேண்டும். இல்லாவிட்டால் மனு தள்ளுபடியாகிவிடும் என்று கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் திரு.கணபதி ஏற்கெனவே தெரிவித்ததால், நான் அவசர வேலையாக வெளியில் செல்ல வேண்டியிருந்ததால், நான் பொதட்டூர்பேட்டை மின்வாரிய அலுவலகத்திற்கு சென்று கடந்த 14.03.2023-ந்தேதி அரசு கட்டணம் ரூ.5,086/-ஐ கட்டினேன். அதன்பிறகும் என் வீட்டிற்கு மின்னிணைப்பு கொடுக்கவில்லை. அதன்பின், நான் இன்று 23.03.2023-ந்தேதி திரு.கணபதி, கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு காலை சுமார் 11.15 மணிக்கு செல்போனில் தொடர்பு கொண்டு, அரசிற்கு செலுத்த வேண்டிய பணத்தை செலுத்திவிட்டேன் என்றும், ஆனால் இன்னும் புதிய மின்னிணைப்பு தரவில்லை என்றும் தெரிவித்தேன். அதற்கு கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் திரு.கணபதி அவர்கள் நான் ஏற்கெனவே கேட்ட பணம் ரூ.2,000/-த்துடன் அவரது அலுவலகத்திற்கு வந்து அவரை பார்த்து பணத்தை கொடுத்தால், வேலையை முடித்துவிடுகிறேன் என்று தெரிவித்தார். எனக்கு திரு.கணபதி, கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு லஞ்சமாக பணம் ரூ.2,000/-ம் கொடுத்து புது மின்னிணைப்பு பெற விருப்பம் இல்லை. அதனால் அவர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.2,000/-ஐ ஏற்பாடு செய்துவர காலதாமதமாகிவிட்டது என்றும், தற்போது தங்களிடம் வந்து இன்று இப்புகாரை கொடுக்கிறேன். தாங்கள், திரு.கணபதி, கமர்ஷியல் இன்ஸ்பெக்டர், தமிழ்நாடு மின்சாரத்துறை, பொதட்டூர் பேட்டை, திருவள்ளூர் மாவட்டம் என்பவர் மீது சட்டப்படியான நடவடிக்கை

**(FIR contents continues to the next page……)**

**(Contents of the F.I.R. In Thiruvallur V & AC, Cr.No.4/AC/2023/TVL, U/s. 7 (a) of Prevention of Corruption Act – 1988 as amended In 2018, continues......)**

எடுப்பதற்கு நான் முழு ஒத்துழைப்பு கொடுப்பேன் என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு சரியாக எழுத வராததால், நான் அளித்த வாக்குமூலத்தை காவல் ஆய்வாளராகிய தாங்கள் நான் சொல்ல சொல்ல அலுவலக கணினியில். தங்கள் அலுவல போலீசாரின் உதவியுடன் டைப் செய்து. பிரிண்ட் எடுத்து அதனை என்னிடம் கொடுத்தீர்கள். நான் படித்துப்பார்த்து சரியாக இருந்ததால். கையொப்பம் செய்தேன். **SdXXX(S.V.பிரகாஷ்).** 23.03.2023. **Sir, The above oral statement of complainant was recorded by me. SdXXX(N.Sumathra),** 23.03.2023.

Honoured Sir,

I recorded the oral statement of the complainant as complaint on 23.03.2023 at 14.00 hrs and after getting proper permission from DVAC on this complaint, a preliminary enquiry is conducted in a discreet manner. Based on the outcome of the preliminary enquiry, enmity, genuineness of the complaint and the reputation of the accused are verified. Since, there is prima-facie made out to register a FIR on said complaint against the accused Tr.Ganapathi, Commercial Inspector, TANGEDCO, Podaturpet, Thiruvallur District. Hence, I registered a case in Thiruvallur V&AC, Cr.No.4/AC/2023/TVL u/s. 7 (a) of The Prevention of Corruption Act-1988 as amended in 2018 on today 23.03.2023 at about 15.30 hrs and took-up action.

**(N.SUMATHRA),**
Inspector of Police, 23/03/2023
Vigilance and Anti-Corruption,
Thiruvallur.